<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No.**16/2022 **Date**: 16.07.2025

**PW**3- துரைசாமி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதியை எனக்கு தெரியாது. பிரதிவாதியை எனக்கு சுமார் 6, 7 வருடங்களாக தெரியும். அவர் நிலக்கடலை வியாபாரம் செய்வதால் எனக்கு பழக்கம். வா.சா.2 ஐ எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஐ எழுதும்போது பிரதிவாதிதான் என்னை அழைத்து சென்றார். கடன் தொகையை நான் எண்ணி பார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி என்னிடம் ஏதாவது சொன்னாரா என்றால், பிரதிவாதி வட்டி கொடுப்பதில்லை என்றும், அசலையும் வட்டியையும் வாங்கி கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் பிரதிவாதியை பார்த்து இதுபற்றி சொன்னேன், ஆனால் அவர் கண்டுகொள்ளவில்லை. வா.சா.ஆ.1 ல் பிரதிவாதிதான் முதலில் கையெழுத்து செய்தார். 2 வதாக வா.சா.2 செந்தில்குமார் கையெழுத்து செய்தார். 3 வதாக நான் கையெழுத்து செய்தேன். வாதி வீட்டிற்கு நான் தனியாகத்தான் சென்றேன். வாதி வீட்டிற்கு நான் வா.சா.ஆ.1 தேதிக்கு முன்ப சென்று வருவேன் என்றால், சரியல்ல. மைலேரிப்பட்டி கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 தேதியன்றுதான் வாதியின் வீட்டிற்கும், அவரது ஓட்டல் கடைக்கும் சென்றேன். பிரதிவாதிதான் சாட்சி கையொப்பம் செய்வதற்கு என்னை அழைத்தார். பிரதிவாதி கல்லபாளையம் மாது என்பவரிடம் சீட்டு போட்டு வந்தார் என்றாலும், அந்த மாது கேட்டுக்கொண்டதற்காகத்தான் நான் வா.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ல் செந்தில்குமார் முதலில் கையொப்பம் செய்தார் என்று சொன்னால், அது பொய் என்றால், சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில்

சொன்ன நேரத்தில் வா.சா.ஆ.1 எழுதப்படவில்லை என்றால், சரியல்ல. கல்லபாளையம் மாது கேட்டுக்கொண்டதால்தான் வா.சா.ஆ.1 பொய்யாக தயார் செய்து பொய் வழக்கு தாக்கல் செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/-துரைசாமி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.